

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (9.9.2025) தலைமைச் செயலகத்தில், டெல்டா எலக்ட்ரானிக்ஸ் (தாய்லாந்து) தலைவர் ஜேம்ஸ் இங் (Mr. James NG), டெல்டா எல்க்ட்ரானிக்ஸ் (தைவான்) துணைத் தலைவர் மார்க் கோ (Mr. Mark KO) ஆகியோர் சந்தித்து பேசினார்கள். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, டெல்டா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் முதலீடு, புதிய வணிக மேம்பாடு மற்றும் அரசு உறவுகள் துணைத் தலைவர் ஓம் பிரகாஷ் ராமமூர்த்தி, முதலீடு மற்றும் அரசு உறவுகள் மூத்த இயக்குநர் என்.வரதராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (9.9.2025) தலைமைச் செயலகத்தில், கஜகஸ்தானின் ஷிம்கென்ட்டில் நடைபெற்ற 16வது ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் –2025 போட்டியில் இந்திய அணியில் இடம்பெற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த – இளைஞர் ஆண்கள் பிரிவில், தனிநபர், குழு மற்றும் கலப்பு ஜோடிகளில் தங்கப் பதக்கங்கள் வென்ற எஸ்.எம். யுகன், இளைஞர் பெண்கள் பிரிவில் தனிநபர் மற்றும் குழு போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற நிலா ராஜா பாலு, தனிநபர் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற ஆந்த்ரா ராஜசேகர் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

# தொலைநோக்குடன் முன்னோடித் திட்டங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

இதையெல்லாம் சமத்துவத்துக்கு எதிரானவர்களுக்கு அலர்ஜியை வழங்கியிருக்கிறது. தமிழ்நாட்டின் வளர்ச்சியைப் பொறுத்துக் கொள்ள முடியாத அவர்கள், இந்த வளர்ச்சிக்கு காரணமாக இருக்கின்ற திராவிட மாடல் மீது, அவதூறுகளை பரப்புகிறார்கள். அவர்களையெல்லாம் புறந்தள்ளி, எங்களுடைய பயணத்தை தொடர்ந்து கொண்டிருக்கிறோம்!

அடுத்தபடியாக, கூட்டாட்சி முறை வலுப்பெறவேண்டும்; மாநில உரிமை காக்கப்படவேண்டும் என்று தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறோம்.

நேற்றுகூட உங்கள் நிகழ்ச்சிகளில், நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள், நிதி விவகாரங்களில், ஒன்றிய பா.ஜ.க. அரசு கடைப்பிடித்து வருகின்ற மாற்றாந்தாய் மனப்பான்மையை குறிப்பிட்டு, கூட்டுறவு கூட்டாட்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்திப் பேசினார்.

நாங்கள் ஏன் தொடர்ந்து கூட்டாட்சிக்காக பேசுகிறோம் என்றால், வளமான இந்தியா, வலிமையான இந்தியாவும் உருவாக வேண்டும் என்றால், மாநிலங்கள் வலிமையாக இருக்கவேண்டும்!

மாநிலங்கள் தங்களுடைய வளர்ச்சிப் பாதையை தாங்களே வகுக்கவேண்டும். குறிப்பாக, கல்வி மற்றும் மருத்துவம் மாநிலங்களின் கையில் இருக்கவேண்டும்.

### தமிழ்நாட்டிற்கு ஓரவஞ்சனை!

இந்தியா என்பது ஒருதுணைக்கண்டம். அதனால், நாடு முழுமைக்கும் ஒரே கல்விக் கொள்கை சரியானதாக இருக்காது. இருமொழிக் கொள்கையை உறுதியாக பின்பற்றி வருகின்ற நாங்கள், தேசிய கல்விக் கொள்கை வலியுறுத்துகின்ற மும்மொழிக் கொள்கையை ஒருநாளும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். அதற்காக, நியாயமாக எங்களுக்கு வர வேண்டிய கல்வி நிதியை ஒன்றிய பா.ஜ.க. அரசு தர மறுக்கிறார்கள். மற்ற நிதி ஒதுக்கீட்டிலும், தமிழ்நாட்டிற்கு ஓரவஞ்சனை காட்டுகிறார்கள்.

தமிழ்நாடு அரசு தன்னுடைய உரிமைகள் ஒவ்வொன்றையும், தொடர்ந்து சட்டப் போராட்டங்கள் மூலமாகத்தான் நிலைநாட்டி வருகிறது. நியமன ஆளுநரின் முட்டுக்கட்டைகள், ஒன்றிய அரசின் தடைக்கற்கள் என்று பல வரலாம். ஆனாலும், தமிழ்நாடு போராடும்; தமிழ்நாடு வெல்லும்!

எத்தனையோ இடர்கள், எத்தனையோ தடைக்கற்கள், எத்தனையோ சூழ்ச்சி அரசியல்கள். ஆனால், எந்த வகையிலும் திராவிட மாடல் அடிப்படையிலான தமிழ்நாட்டின் வளர்ச்சியை தடுக்க முடியவில்லை! அதனால்தான், இந்தியாவிலேயே இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை எட்டிக்காட்டிய ஒரே மாநிலமாக திராவிட மாடல் தமிழ்நாட்டை உயர்த்தியிருக்கிறது.

எங்களுக்கு ஒரு இலக்கு இருக்கிறது. 2030ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்றவேண்டும்! இந்த இலக்கை நோக்கி வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறோம்! நிச்சயமாக சொல்கிறேன், திராவிட மாடல் 2.0ல் அதையும் சாதித்து காட்டுவோம்!

எங்களுடைய Roadmap தெளிவாக இருக்கிறது! அதனால்தான், தொழில் வளர்ச்சியில் முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டை நோக்கி முதலீடுகள் வருகிறது!

இன்றைக்கு நீங்கள் கூடியிருக்கும் கோயம்புத்தூர், தென்னிந்தியாவின் மான்செஸ்டராக இந்த வளர்ச்சியின் முக்கியமையங்களில்ஒன்றாகவிளங்குகிறது!

தொலைநோக்குப் பார்வையுடன், தமிழ்நாட்டிற்கான எதிர்காலத்தை வலிமையாக கட்டமைக்க வேண்டும் என்று மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்காக பல முன்னோடித் திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மிகுந்த உணவு வழங்குகிறோம். இளைஞர்களை Upskill செய்கின்ற “நான் முதல்வன் திறன் மேம்பாட்டு திட்டம்”, ஆயிரம் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு முதன்மையான உயர்கல்வி நிறுவனங்களில், கல்வி பயில வாய்ப்பு உருவாகியிருக்கின்ற திறனறி தேர்வுத் திட்டம்!

> **இந்தியா என்பது ஒரு துணைக்கண்டம். அதனால், நாடு முழுமைக்கும் ஒரே கல்விக் கொள்கை சரியானதாக இருக்காது. இருமொழிக் கொள்கையை உறுதியாக பின்பற்றி வருகின்ற நாங்கள், தேசிய கல்விக் கொள்கை வலியுறுத்துகின்ற மும்மொழிக் கொள்கையை ஒருநாளும் ஏற்றுக் கொள்ள மாட்டோம்.**

பெண்களின் உயர்கல்வியை ஊக்குவிக்க, மாதம் ஆயிரம் ரூபாய் வழங்குகின்ற புதுமைப் பெண் திட்டம்.

அதேபோல, மாணவர்களுக்கான தமிழ்ப் புதல்வன் திட்டம் என்று நாங்கள் உருவாக்கியிருக்கின்ற திட்டங்கள் எல்லாம் அதனுடைய நோக்கத்தில் வெற்றியடைந்து கொண்டிருக்கிறது.

எங்களைப் பொறுத்தவரைக்கும், கல்விக்கு எந்தத் தடையும் ஏற்படக் கூடாது! ஏனென்றால், கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர்கள் நாங்கள்.

கல்வி என்பது நாம் போராடி பெற்ற உரிமை! இன்றைக்கும் கல்விக்கு எப்படிப்பட்ட இடர்கள் உருவாக்கப்படுகிறது என்று உங்கள் எல்லோருக்கும் நன்றாக தெரியும்!

நான் உறுதியாக சொல்கிறேன் யார் எத்தனை தடைகளை ஏற்படுத்தினாலும், கல்வியில் எங்கள் முன்னேற்றத்தைத் தடுக்க முடியாது.

அதேபோல, பெண்கள் முன்னேற்றம் மற்றும் பாலினச் சமத்துவத்தை நோக்கியும் உழைத்துக் கொண்டிருக்கிறோம்.

மகளிர் உயர மாநிலம் உயரும்! அதற்காக, ஒரு கோடியே 15 இலட்சம் மகளிர் மாதம் ஆயிரம் ரூபாய் பெறும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், 528 கோடி முறை கட்டணமில்லா பேருந்து பயணம் மேற்கொண்டிருக்கின்ற விடியல் பயணம் திட்டம் போன்றவற்றை செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம்!

### நல்லரசுக்கான இலக்கணம் இதுதான்!

எதிர்காலத்திற்கான வலிமையான கட்டமைப்புகளை உருவாக்கி, மக்களுடைய தேவைகளை உணர்ந்து, அதற்கான திட்டங்களை உருவாக்குவதுடன், அந்தத் திட்டங்கள் எளிமையாக மக்களிடம் சென்றடைவதை உறுதி செய்வதுதான் நல்லரசுக்கான இலக்கணம்!

அந்த வகையில், “உங்களுடன் ஸ்டாலின்” திட்டம் மூலம், 10 ஆயிரம் சிறப்பு முகாம்கள் நடத்தத் திட்டமிடப்பட்டு, இதுவரை, 5 ஆயிரத்து 691 முகாம்கள் நடத்தி முடிக்கப்பட்டிருக்கிறது. இதில், 46 அரசுத்துறை சேவைகளை வழங்குகிறோம்.

மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் இட ஒதுக்கீடு வழங்கி, அவர்கள் குரல் ஒலிப்பதை உறுதி செய்திருக்கிறோம்.

இப்படி, மக்களுக்கான தேவைகள் என்னவென்று பார்த்து, பார்த்து செய்வதால் தான், பலரும் நம்முடைய திராவிட மாடல் அரசை இந்தியாவிற்கான வழிகாட்டியாக சொல்கிறார்கள்.

யூடியூப்ல் பல வடஇந்திய சேனல்களும், திராவிட மாடலின் செயல்பாடுகளை தங்களுடைய மாநில மக்களுக்கு எடுத்துச் சொல்கிறார்கள்.

நேற்றுகூட, ‘கோன் பனேகா குரோர்பதி’ (KBC) நிகழ்ச்சியில், அமிதாப் பச்சன் அவர்கள் மன்னார் வளைகுடாவில் இருக்கின்ற கரியாச்சல்லி தீவை காப்பாற்ற திராவிட மாடல் அரசு எடுத்து வருகின்ற முயற்சிகளைப் பற்றி சொல்லியிருக்கார். இப்படி, யாரையும் புறக்கணிக்காத, திட்டமிட்ட வளர்ச்சிப் பாதையில் செல்லும் தமிழ்நாட்டின் பயணம், ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான கல்வி, ஒவ்வொரு பெண்ணுக்கும் மேம்பாடு, ஒடுக்கப்பட்டவருக்கு உயர்வு என்பதை உறுதி செய்கிறது.

உங்கள் எல்லோருடைய ஒத்துழைப்போடு, உலக அளவில் தலை சிறந்த மாநிலமாக, தமிழ்நாட்டை உருவாக்க அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து நாங்கள் மேற்கொள்வோம் என்று உறுதியளித்து, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

‘திராவிட மாடல்’ ஆட்சியின் நாயகர்

# முதல்வர் மு.க.ஸ்டாலினை உச்சிமோந்து தாய்க் கழகம் வரவேற்கிறது!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

*சென்னை, செப்.10-*

*திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*சமூகநீதிக்கான சரித்திர நாயகராம் நமது முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் முதல் வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தை 2021இல் தொடங்கினார். அமெரிக்கா, சிங்கப்பூர், ஜப்பான், ஸ்பெயின் நாடுகளுக்குச் சென்று வந்தார். எடுத்த எடுப்பிலேயே ரூ.18,498 கோடி மதிப்பிலான தொழில் முதலீடுகளைக் கொண்டு வந்தார். 30 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகளுக்கு வழி செய்தார்.*

*அடுத்த கட்ட பயணமாக கடந்த ஆகஸ்ட் 30ஆம் தேதி புறப்பட்டு ஜெர்மனி, இங்கிலாந்து நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு இன்று விடியற்காலை 3 மணிக்கு வந்தடைந்தார். முதலீடுகளை மட்டுமல்ல; அங்கு வாழும் தமிழர் குடும்பங்களின் விலை மதிக்கவே முடியாத அன்பையும் திரட்டி வந்தார். முதலீட்டாளர்களின் நன்னம்பிக்கையையும் ஈட்டி வந்தார்.*

*ஜெர்மனி பயணத்தை வெற்றிகரமாக முடித்து இலண்டன் சென்றார். அங்கு நான்கு நாட்கள் முழுமையாக தங்கினார்.*

*இந்த ஒரு வார பயணத்தில் ரூ.15516 கோடி முதலீடுகளை ஈர்த்துள்ளார். 17613 பேருக்கான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.*

*‘திராவிட மாடல்’ ஆட்சியில் தமிழ்நாடு - இந்தியாவில் பொருளாதார வளர்ச்சியில் இரண்டாவது இடத்தில் உள்ளது.*

*இந்த வேகத்தில் சென்றால் முதலிடத்தில் தமிழ்நாடு மிளிரும் என்பதில் அய்யமில்லை.*

*இந்தச் சுற்றுப் பயணத்தில் உலகம் முழுவதுமுள்ள தமிழர்கள் நெஞ்சில் சிலிர்ப்பூட்டும் வரலாற்றுச் சிறப்பான நிகழ்ச்சி என்பது - லண்டன் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் படத்தினை தந்தை பெரியாரின் பேரன் என்று தன்னைப் பெருமையாகக் கூறிக் கொள்ளும் நமது திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், உலகப் புகழ் பெற்ற பல்கலைக் கழக அரங்கில் திறந்து வைத்து, மகிழ்ச்சிக் கடலில் மிதந்தார்! வரலாற்றில் கிடைத்தற்கரிய பெரும் பேறு என்று புளகாங்கிதம் அடைந்தார்.*



*தந்தை பெரியாரின் சிந்தனைகள் உலகளாவிய சமூக மாற்றத்திற்கு வழி காட்டுபவை என்பதை ஏற்ற இறக்கத்துடன் எழுச்சியுரை ஆற்றினார்.*

*உலகமயமாகிறார் பெரியார் என்று நாம் தொடர்ந்து கூறி வந்ததை, தமக்கே உரித்தான அழுத்தமான ஆணித்தரமான சொற்களால் ஓங்கி ஒலிக்கப்பட்ட உரை அது!*

*அறியாமை புதைக்கப்பட்டு சுயமரியாதை விதைக்கப்பட்டு கொள்கை முதலீடுகளை செய்து வந்திருக்கிறார்.*

*அதற்காக முதல்வருக்கு நமது தனித்த பாராட்டுகள்.*

*மண்டைச் சுரப்பை உலகு தொழும் என்றாரே தந்தை பெரியாரைப்பற்றி புரட்சிக் கவிஞர்.*

*அந்தப் பாடல் வரிகள் தான் நம் நெஞ்சங்களில் எல்லாம் அலையடித்து பாய்ந்தன.*

*கார்ல் மார்க்ஸ் நினைவிடம், அண்ணல் அம்பேத்கர் தங்கிப் படித்த இடங்களைப் பார்த்தது - அவரது சிந்தனை ஓட்டம் எத்தகையது என்பதற்கான அடையாளமாகும்.*

*வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து வந்தார் என்பது ஒரு பக்கம், தமிழ்நாட்டின் தனிப் பெரும் உயர் சிந்தனையாளரான தந்தை பெரியாரின் சீலங்களை உலகம் உணரும் வண்ணம் அதுவும் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உலகே திருப்பிப் பார்க்கும் வகையில் முரசொலித்து திரும்பும் அருமைச் சகோதரர் நமது மானமிகு மாண்புமிகு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை உச்சி மோந்து ஆரத் தழுவி உளம் பூர்வமாகத் தாய்க் கழகமாம் திராவிடர் கழகம் வரவேற்கிறது - வாழ்த்துகிறது!*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூர் கிழக்கு ஒன்றிய அவசர செயல் வீரர்கள் கூட்டமானது, கெடிலம் பகுதியில் வசந்த மஹால் திருமண மண்டபத்தில் திருநாவலூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர், மாவட்ட கவுன்சிலர், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஜி.ஆர்.வசந்தவேல் தலைமையில், சிறப்பு அழைப்பாளர் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் இரா.ஸ்ரீதரன் கலந்து கொண்டு சிறப்பித்தார், இதில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட பொருளாளர், தேர்தல் பகுதிபணிக்குழு ஒருங்கிணைப்பாளர் வீ.சு.வீரபாண்டியன் மற்றும் தேர்தல் பகுதிபணிக்குழு ஒருங்கிணைப்பாளர் கே.ஆர். ஜெகதீசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர், மேலும் இக்கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள்,தேர்தல் பகுதிபணிக்குழு உறுப்பினர்கள், பாக முகவர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கடலூர் மேற்கு மாவட்டம் விருத்தாசலம் வடக்கு ஒன்றியம் சார்பில் கோமங்கலம் கிராமத்தில் கிளைக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. ஒன்றியக் கழகச் செயலாளர் கனக. கோவிந்தசாமி தலைமை தாங்கினார். ஒன்றியக் கழகப் பொருளாளர் ஆர்.ஜி.சாமி, மாவட்ட இலக்கிய அணித் தலைவர் பட்டி கருணாநிதி, ஒன்றிய துணைச் செயலாளர் அன்பழகி ராஜேந்திரன், தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் தமிழ்ச்செல்வன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பட்டி வசந்தகுமார் வரவேற்றார். இக்கூட்டத்தில் விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர் குலோத்துங்கன் கலந்து கொண்டு கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார். இதில் தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் சௌந்தரராஜன், ஜெகதீஸ்வரன் மற்றும் மணவாளநல்லூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் கிளைக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. ஒன்றிய கழக நார்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.